புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஏப்ரல் (April) 23, 2026 • புரட்சி 26 • முழக்கம் (ISSUE) 17 • விலை(PRICE) ரூ.6.00

# தேர்தல் பரப்புரையில் கழகத் தோழர்கள்

**திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கழகத் தோழர்கள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பரப்புரை இயக்கங்களை நடத்தினர்.**

**கடலூர்:** புவனகிரி திமுக சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சரவணன் அவர்களை சந்தித்து கடலூர் மாவட்டக் கழகத்தின் சார்பாக பயனாடை அணிவித்து ஆதரவு தெரிவித்தனர். திண்டிவனம் தொகுதி விசிக துணைப் பொதுச் செயலாளர் வன்னிஅரசு அவர்களை ஆதரித்து பானை சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கடலூர் சிவா தலைமையில் உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்), பொன்ராஜ், சத்யா, லதா கலைக்குழுவினர் மற்றும் வீரா, அசோக் ஆகியோர் தேர்தல் பரப்புரை மேற்கொண்டனர். காங்கிரஸ் வேட்பாளர் ஏ.எஸ்.சந்திரகுமாரை ஆதரித்தும் தொடர் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

**புதுக்கோட்டை:** ஏப்ரல் 16, 2026 முதல் ஏப்ரல் 19 வரை 4 நாள் புதுக்கோட்டை சட்டமன்ற மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக வேட்பாளர் மருத்துவர் வை.முத்துராஜா அவர்களை ஆதரித்து கழகம் சார்பாக தெருமுனை பிரச்சாரம் செய்து மக்களிடையே ஓட்டுகளை சேகரித்தனர். உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்) தலைமையில் சத்யா, லதா ஆகியோர் பாடல்கள், அரசியல் நையாண்டி மூலம் பரப்புரையை மேற்கொண்டனர். கடலூர் மாவட்டக் கழகத் தோழர் சிவா, கோபி (திருவல்லிக்கேணி பகுதி தலைவர்), சூர்யா (திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர்), அசோக், வீரா, இரண்யா ஆகியோர் பரப்புரையில் பங்கேற்றனர்.



**மேட்டூர்:** சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேச்சேரி கிழக்கு ஒன்றியம் ஓலைப்பட்டி ஊராட்சி, சிந்தாமணியூர், மேச்சேரி பேருந்து நிலையம், சந்திரம்மாள் கடை பேருந்து நிறுத்தம், மேட்டூர் ஆர். எஸ், தங்கமாபுரி பட்டினம், சேலம் கேம்ப், தேசாய் நகர், எம்.காளிப்பட்டி ஊராட்சி, மூர்த்திப்பட்டி ஆகிய இடங்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் மிதுன் சக்கரவர்த்தி அவர்களுக்கு சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன் தலைமையில் கடந்த 10 நாட்களாக வீடு வீடாக சென்று மக்களை நேரில் சந்தித்து ஆதரவு திரட்டி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். **திமுக:** சேலம் மேற்கு மாவட்ட வர்த்தக அணி துணை



அமைப்பாளர் முருகன், பிரகாஷ் மேலவை பிரதிநிதி, சிறுபான்மை நல பிரிவு துணை அமைப்பாளர் கணேசன், சிவகுமார், கோபாலகிருஷ்ணன், சேகர், சுப்ரமணி, தேவராஜ், பாஸ்கர், பெருமாள் வெங்கட சரவணன் ஒன்றிய நெசவாளர் அணி அமைப்பாளர், சக்கரை முருகன், நேசமணி ஒன்றிய மாற்றுத்திறனாளி அணி, முருகேசன், தமிழ்வாணன் கிளைச் செயலாளர், அர்த்தனாரி, தமிழரசன் இளைஞர் அணி, ராமன், கல்பனா ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர், கோபாலகிருஷ்ணன் பூத் பொறுப்பாளர், ராஜ்குமார் பூத் பொறுப்பாளர், ரமேஷ் பூத் பொறுப்பாளர், நிஷாந்த் பூத் பொறுப்பாளர். மூர்த்திப்பட்டி தனபாலன், திவாகர் கிளைச் செயலாளர், கழகத் தோழர்கள் ஏற்காடு பெருமாள், சிந்தாமணியூர் ஜெயபிரகாஷ், தங்கதுரை, கே.ஆர்.தோப்பூர் கண்ணன், பிரபாகரன், முத்துராஜ், ஆத்தூர் கணபதி, கவியரசு, ஏற்காடு கார்த்திகேயன், தேவபிரகாஷ், ஈழ பிரபாகரன், நாகராஜ், கோகுல், புகழேந்தி, மசக்காளியூர் அர்த்தனாரி, புக்கம்பட்டி கணேசன்,ஹரி, தினேஷ், சித்திக், அறிவழகன், சந்திரசேகரன், பேரறிவாளன், தமிழருவி,உமாசங்கர் ஆகியோர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

**எடப்பாடி:** சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நங்கவள்ளி மத்திய ஒன்றியம் அங்கிரெட்டியூர், சொக்கையன் காட்டுவளவு, ஈஷா பள்ளி, புதுப்பேட்டை, மசக்காளியூர், பனங்காடு, மூலக்காடு, அருவங்காடு, தானாபதியூர், சாணாரப்பட்டி,



சப்பாணிப்பட்டி, லெனின் நகர் பகுதிகளில் ஏப்ரல் 17,19 வரை மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் காசி அவர்களுக்கு வீடு வீடாக சென்று மக்களை நேரில் சந்தித்து, ஆதரவு திரட்டி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டோம். திமுக: 10-வது வார்டு கவுன்சிலர் மகாலட்சுமி, வார்டுச் செயலாளர் முத்துசாமி, குமார், பூபதி, கோவிந்தன், பழனிசாமி 1-வது வார்டு துணைச் செயலாளர், மாது, கழக சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் பிரபாகரன் ஆகியோர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

**திருப்பூர்:** மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் அவினாசி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் "மருத்துவர் கோகிலாமணி" அவர்களை ஆதரித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி 15.04.2026 புதன்கிழமை அன்று இரவு 7 மணி முதல் 10 மணி வரை அவினாசி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கந்தம்பாளையம், நாதம்பாளையம், வெள்ளியம்பாளையம் ஆகிய பகுதிகளில் பரப்புரையை மேற்கொண்டனர். தமிழ்நாட்டின் நலனிலும், மக்கள் நலனிலும் அக்கறை செலுத்தி வரும் "ஸ்டாலின் ஆட்சி" மீண்டும் தொடர மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் அவினாசி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் "மருத்துவர் கோகிலாமணி" அவர்களை ஆதரித்து, வெற்றி பெற உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

கழகப் பொருளாளர் துரைசாமி, கோவை, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்ட கழக மாவட்ட, நகர, ஒன்றிய, கிளைப் பொறுப்பாளர்கள், தோழர்கள் மற்றும் தோழமை அமைப்பபுகளைச் சார்ந்த தோழர்கள் பலர் பங்கேற்றனர்.

16.04.2026 அன்று மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பாக போட்டியிடும் தெற்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் என். தினேஷ்குமார்



அவர்களுக்கு காலையில் தொடங்கி ராயபுரம் பகுதி, அணைப் பாளையம், மரக்கடை நிறுத்தம், கொங்கணகிரி, மாஸ்கோ நகர், பிவிஜி நகர், பெரியார் சிலை, பழைய பேருந்து நிறுத்தம், சந்தைப்பேட்டை, காட்டுவளவு, தென்னம்பாளையம், பிரிச்சிபாளையம், புஷ்பா நகர், ராக்கியாபாளையம், நல்லூர் உள்ளிட்ட 15 இடங்களில் உதயசூரியன் சின்னத்திற்கு கழகம் சார்பாக வாக்கு சேகரித்தனர்.

**கோவை:** தெற்கு தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் செந்தில் பாலாஜி அவர்களுக்கு ஆதரவாக காந்திபுரம் கிராஸ்கட் ரோடு 100 அடி ரோடு சிவானந்த குடியிருப்பு பகுதிகளில் நடைபெற்ற பிரச்சாரத்தில் கோவை மாநகர கழகத் தோழர்கள் வெங்கட், நிர்மல் குமார், இராஜலட்சுமி , சதீஷ், சத்தியமூர்த்தி, கிருஷ்ணன் கலந்து கொண்டனர். வேட்பாளர் செந்தில் பாலாஜி அவர்களுக்கு கழக வெளியீடுகளை வழங்கி வெற்றி பெற வாழ்த்தினர்.

சூலூரில் மதச்சார்பற்ற கூட்டணி தேர்தல் பிரசாசாரத்தில் வேட்பாளர் தளபதி முருகேசனை ஆதரித்து பன்னிர்செல்வம், பொங்கலூர் கார்த்தி, தமிழ்ச்செல்வி கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.



மக்களிடம் துண்டறிக்கைகளை கொடுத்து ஸ்டாலின் ஆட்சி ஏன் தொடர வேண்டும் என்று எடுத்துரைத்தனர்.

**புதுச்சேரி:** ஏப்ரல்-6,7 இரண்டு நாட்கள் புதுச்சேரி திமுக வேட்பாளர்கள் விக்னேஷ் கணேசன், செந்தில் முருகன் ஆகியோரை ஆதரித்து சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி தலைமையில் தோழர்கள் பரப்புரையை மேற்கொண்டனர். பாடகர் பொன்ராஜ், பெரியார் சிந்தனையாளர் இயக்கம் தீனா, கடலூர் சிவா, கோபிநாத், திருவல்லிக்கேணி பகுதி தலைவர், சூர்யா( திருவல்லிக்கேணி பகுதி அமைபாளர்), வீரா, அசோக், இரண்யா ஆகியோர் பங்கேற்றனர்.

**மயிலாப்பூர்:** தமிழ் தேச மக்கள் முன்னணி, திராவிடர் விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் உரிமை



முன்னணி, பாட்டாளி வர்க்க சமரன் அணி, தொழிலாளர் சீரமைப்பு இயக்கம், பெரியாரிய அம்பேத்கரிய மக்கள் இயக்கம், இந்திய ஒற்றுமை இயக்கம் ஆகிய இயக்கங்கள் இணைந்து, "மக்கள் இயக்கங்களின் கூட்டமைப்பு - 2026" எனும் பெயரில், ZEROBJP (0/234) எனும் இலக்கோடு, தமிழ்நாட்டில் பாஜக போட்டியிடும் 27 தொகுதிகளிலும் பிரச்சாரம் மேற்கொண்டன. இதன் ஒரு பகுதியாக, சென்னை மயிலாப்பூரில் திமுக வேட்பாளர் த. வேலு அவர்களை ஆதரித்து ஒரு வார தொடர் பரப்புரை நடந்தது. தோழர்கள் செந்தில் (இளந்தமிழகம்), சுகுமார் (திவிக), வெங்கடேசன் (திமுக தென்மேற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்) ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

திருவள்ளுவர் சாலை, விசாலாட்சி தோட்டம், காமராஜர் சாலை, சத்தியமூர்த்தி நகர், ஆலையம்மன் கோயில், வோல்டாஸ், மந்தைவெளி சந்தை, முல்லை மாநகர், டுமீல் குப்பம், குயில் தோட்டம், ராதாகிருஷ்ணபுரம், பக்ஸ் சாலை, பல்லக்கு மாநகர், லஸ் கார்னர், ரோட்டரி நகர் ஆகிய இடங்களில் 14 கூட்டங்கள் நடத்தப்பட்டன. தோழர்கள் ஜாகிர் - கதிர் ஆகியோரின் நையாண்டி நிகழ்ச்சி, நல்ல வரவேற்பைப் பெற்றது. பெஅமஇ தோழர்களின் பறையிசை கவனத்தை ஈர்த்தது.

திவிக சார்பாக தலைமைக் குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், இணையதள பொறுப்பாளர் விஜய் குமார், தாம்பரம் நகர அமைப்பாளர் அருண் கோமதி, கழகப் பேச்சாளர் மகிழவன் ஆகியோரும், நிமிர்வோம் வாசகர் வட்டம் சார்பாக, ஒருங்கிணைப்பாளர் ர.பிரகாசு, அமைப்பாளர் (தெ. செ) இம்மேனுவல் துரை ஆகியோரும், தோழமை இயக்கங்களின் சார்பில் தமஉமு ஒருங்கிணைப்பாளர் தியாகு, மனோகரன் (பாவசஅ), ஜெயகிருஷ்ணன், தாமரை (புஇமு), பாலன் (ததேமமு), பேராசிரியர் குழந்தை, மேரி லில்லி பாய் (இஒஇ), சமந்தா (ததேவிஇ), தெய்வீகன் (மஅ), தம்பி மண்டேலா (மகுஇ), வே. பாரதி (ததேவிஇ), மீ. த. பாண்டியன் (தமபக), தாமஸ் பிராங்கோ (அஇமஇ), ரமணி (சாஒமு), அருண் சோரி (ததேமமு) ஆகியோரும் கருத்துரையாற்றினர்.

மாவட்டத் தலைவர் மா. வேழவேந்தன், மனோகர், ஜெயந்தி, புருஷோத்தமன், தாமரை, பாரி சிவா, ஏசுகுமார், பிரகாஷ் மாஸ்டர், தமிழ்ச்செல்வன், முழக்கம் உமாபதி உள்ளிட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

ஏப்ரல்-15, மாலை 6 மணிக்கு, ஆயிரம் விளக்கு தொகுதி திமுக வேட்பாளர் மருத்துவர் எழிலன் அவர்களை ஆதரித்து, கோபாலபுரம் பகுதியில், மாவட்டத் தலைவர் மா. வேழவேந்தன், அமைப்பாளர் ம. கி. எட்வின் பிரபாகரன், துணைச் செயலாளர் இராவணன், இளைஞரணி அமைபாளர் ப. அருண், தோழர்கள் சுகுமார், சு. பிரகாஷ், ப்ரவீன் ஏ.கே.எஸ் ஆகியோர் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.



தலையங்கம்

# சட்டத்தின் ஆட்சியா? பார்ப்பன ஆட்சியா?

சபரிமலை அய்யப்பன் கோயிலில் 10 முதல் 50 வயது வரை உள்ள பெண்களை அனுமதிக்க மறுப்பது 'தீண்டாமைக் குற்றம்' என்று 2019ல் உச்ச நீதிமன்றத்தில் ரஞ்சன் கோகாய் தலைமையிலான 5 நீதிபதிகள் அமர்வு தீர்ப்பளித்தது. தீர்ப்பை எதிர்த்து மறு ஆய்வு மனுக்கள் குவிந்தன. இப்போது 9 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரணை நடத்தி வருகிறது.

இதுவரை உச்சநீதிமன்றத் தீர்ப்பினை சபரிமலை அய்யப்பன் கோயிலில் அமல்படுத்தவில்லை. தீர்ப்பை உறுதியாக ஆதரித்த கேரள இடதுசாரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி இப்போது தனது முடிவை தேர்தலுக்காக மாற்றிக் கொண்டு விட்டது பெரும் அவலம். சம்பிரதாயங்கள் தொடர்ந்து நீடிக்கலாம் என்று உச்ச நீதிமன்றத்தில் கேரள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி மனு போட்டுள்ளது.

33 விழுக்காடு இட ஒதுக்கீட்டை பெண்கள் உரிமைக்காக கொண்டு வந்ததை எதிர்க்கட்சிகள் தடுத்து விட்டன என்று மோடி "பெண்ணுரிமைக் காவலர்" போல் நீலிக்கண்ணீர் வடிக்கிறார். ஆனால் இதே மோடிஆட்சி உச்ச நீதிமன்றத்தில் சபரிமலையில் பெண்களை அனுமதிக்கக்கூடாது என்று தீவிரமாக வாதிட்டு வருகிறது. ஒன்றிய ஆட்சி சார்பில் வாதாடும் வழக்கறிஞர் துஷார் மேத்தா "கோயில் நடைமுறைகளில் தலையிடும் உரிமை நீதிமன்றங்களுக்கு இல்லை என்றும்; சபரிமலையில் பெண்களை அனுமதிக்க மறுப்பது பக்தர்களுக்கும்; தெய்வத்துக்கும் ஆன உரிமை என்றும்; இது பாலின பாகுபாடு அல்ல!" என்றும் வாதாடுகிறார்.

இடைமறித்த நீதிபதி பி.வி நாகாரத்தினா அனைவருக்கும் வழிபாட்டு உரிமைகளை தரவேண்டிய கோயில்கள் ஒரு பிரிவினருக்கு மட்டும் பாகுபாடு காட்டலாமா? என்று கேட்டதற்கு "இது பாகுபாடுகள் அல்ல! ஒரு பிரிவினருக்கான கோயில்களின் சம்பிரதாயம்" என்கிறார் ஒன்றிய ஆட்சியின் வழக்கறிஞர்.

சட்டத்தின்படி 'இந்து' என்பது ஒரு மதம் என்றாலும் உண்மையில் அது ஒற்றை மதம் அல்ல; பல்வேறு பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி சம்பிரதாயங்கள் உண்டு என்பதே ஒன்றிய ஆட்சியின் வாதமாக இருக்கிறது. அது மட்டுமல்ல "மதத்தை பகுத்தறிவு அல்லது அறிவியல் அடிப்படையில் பார்க்க முடியாது! என்றும் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு சக்தியின் மீது கொண்டுள்ள நம்பிக்கையில் நீதிமன்றம் தலையிட முடியாது" என்றும் வாதிடுகிறார் ஒன்றிய அரசின் வழக்கறிஞர் துஷார் மேத்தா.

குழந்தைத் திருமணத் தடை; விதவை மறுமணம்; உடன்கட்டை ஏறுதலுக்குத் தடை என்று ஒவ்வொரு சீர்திருத்த சட்டங்கள் வந்த போதும் இதே போன்ற எதிர்ப்புக் குரல்கள் தான் பார்ப்பனர்களிடமிருந்து வந்தன. கோயில் நுழைவு சட்டம் வந்தபோதும் அதற்கும் ஆகமங்களைக் காட்டி எதிர்த்தார்கள். கோயிலுக்குள் நுழைய உரிமை மறுக்கப்பட்ட "சூத்திர–பஞ்சமர்"களுக்கு கோபுரங்களைக் கட்டி வீதியிலிருந்து வழிபட வைத்தனர். இப்போதும் வைதீக சடங்குகளில் பெண்களுக்கு அனுமதி இல்லை; பார்ப்பன பெண்கள் "பிராமணர்" ஆக முடியாது. மனுதர்மப்படி அவர்களும் 'சூத்திரர்கள்' தான். அவர்களுக்குப் பூணூல் போடும் உரிமை இல்லை.

"இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் நாடு; எனவே இந்துக்களுக்குத்தான் முன்னுரிமை" என்று அரசியலில் 'இந்துத்துவா' கொள்கையை பேசுகிறார்கள். அதே இந்துக்களில் 'பிராமணர்கள்' மேலாதிக்கத்தை நிலைநிறுத்த; இந்து மதம் ஒரே மதம் அல்ல! அது பல்வேறு பிரிவுகளைக் கொண்டது; ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி சடங்கு வழிபாட்டு உரிமை இருக்கிறது என்கிறார்கள்.

இந்து மதத்தை ஒரே குடையின் கீழ் பொதுமைப்படுத்தி விட்டால் சிறுபான்மை பார்ப்பனர்களின் வேத மதத்தை பிற பிரிவுகளின் மீது திணிக்க முடியாமல் போய்விடும் என்பதே இதன் நோக்கம். பார்ப்பனரல்லாத பெரும்பான்மை இந்துக்களின்மீது பார்ப்பன வேத மதமும் சடங்குகளும் திணிக்கப்பட்டு அவர்களை ஏற்கச் செய்தால்தான் இந்து மதமும் இந்து சமூகமும் பார்ப்பனிய கட்டுப்பாட்டில் நிலைக்கச் செய்ய முடியும். இதன் காரணமாகவே பல்வேறு மதக் குழுக்களை ஒருங்கிணைத்து பிரிட்டிஷ் ஆட்சியில் இந்து என்ற பெயருக்குள் அடக்கிய போது காஞ்சி சங்கராச்சாரி சந்திரசேகர சரஸ்வதி ஆதரித்து மகிழ்ச்சியுடன் கூத்தாடினார்.

இப்போது சட்டத்தால் இந்து மதம் ஒரே மதம் என்றாலும் சாஸ்திர சம்பிரதாயங்களால் வெவ்வேறானவை என்றும் எனவே சபரிமலை அய்யப்பன் கோயில் இந்து மதத்தில் ஒரு பிரிவு என்றும் ஒன்றிய பாஜக ஆட்சி பச்சைப் பார்ப்பனியத்தை பேசுகிறது. பெண்களுக்கு அனுமதியை மறுப்பதற்கு இந்த தனிப்பிரிவை ஒரு காரணமாக முன்வைக்கிறார்கள். சனாதனம் என்ற போர்வைக்குள் இந்தத் தீண்டாமைகள் அடங்கிக் கிடக்கின்றன.

"பிராமண" மேலாதிக்கத்தில் பெண்கள் மீதான தீண்டாமையைத் திணிப்பதில் சட்டங்கள் தலையிட முடியாது என்றால் இந்த நாட்டில் நடப்பது சட்டத்தின் ஆட்சியா? சட்டத்துக்கு அப்பாற்பட்ட பார்ப்பன ஆட்சியா? இதைத்தான் பெரியார் கேட்டார். பெரியார் எழுப்பிய கேள்விகள் இப்போதும் உயிர்த் துடிப்புடன் நீடிக்கிறது என்பதை ஒன்றிய ஆட்சியின் கருத்துக்களே உறுதிப்படுத்துகின்றன.

# டெல்லிக்கு எதிரான போராட்டங்களின் முதல் வெற்றி!

ஒன்றிய அரசு அவசர அவசரமாகக் கொண்டு வந்த மூன்று மசோதாக்களும் தோல்வி அடைந்து விட்டன. "டெல்லி வீழ்ந்தது! தமிழ்நாடு வென்றது!" என்று முதல்வர் மிகச் சரியாகப் பதிவிட்டு இருக்கிறார்.

பெண்களுக்கான 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டை முன்னிறுத்தி கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவுக்கு எதிர்ப்புகள் இருக்காது என்று ஒன்றிய பாஜக ஆட்சி சூழ்ச்சியாக திட்டமிட்டது. ஆனால் தொகுதி மறு சீரமைப்பு என்ற ஆபத்தையும் இணைத்து இந்த மசோதா கொண்டு வரப்படுவதன் நோக்கம்.தென்னகத்தின் உரிமைகளைப் பறிப்பது தான் என்று முதன் முதலாக எதிர்ப்புக் குரல் கொடுத்தவர் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின். தொடர்ந்து தெலுங்கானா,கர்நாடகா, கேரள முதல்வர்களும் காங்கிரஸ் கட்சியும் சமாஜ்வாதி கட்சியும் தமிழ்நாடு முதல்வரின் எதிர்ப்புக் குரலோடு இணைந்தனர்.

எடப்பாடி பழனிச்சாமி மட்டும் பச்சையாக தனது துரோகத்தை வெளிப்படுத்தினார். இன்றைய பரப்புரையில் பெண்களுக்கான 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டை ஸ்டாலின் எதிர்க்கிறார் என்று மோடிக்கு வெட்கமின்றி ஜால்ரா அடித்தார். தொகுதி மறுவரையறை என்ற ஆபத்து இதோடு இணைந்து நிற்கிறது என்பதை எடப்பாடி மக்களிடம் மறைக்க முயன்றார்.

தமிழ்நாட்டுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று பேசி வந்த அமித்ஷாவே கடைசி நேரத்தில் தமிழ்நாட்டிற்கு இதில் பாதிப்பு இருக்கிறது என்பதை நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டார். அமித் ஷா ஒப்புக் கொண்டாலும் முரட்டு அடிமை எடப்பாடி ஒப்புக்கொள்ள மாட்டார். இந்த முக்கிய பிரச்சனையில் வெளிப்படையாக கருத்து தெரிவிக்காமல் மவுனம் சாதித்தாலும் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு மோடியிடமும் அமித்ஷாவிடமும் இந்த மசோதா குறித்து அவசரமாக தனது சந்தேகங்களை எழுப்பி விளக்கம் கேட்டிருக்கிறார்.

ஆனால் எடப்பாடி இந்த மசோதாவில் என்ன இருக்கிறது என்பதை படித்தாரா? இதைப் படித்து ஆய்வு செய்யக்கூடிய குழு ஏதாவது அந்த கட்சியில் இருக்கிறதா? அப்படி அறிகுறிகள் ஏதும் இல்லை! கடைசி நேரத்தில் அமித் ஷா ஒரு மணி நேர அவகாசம் கேட்டார்.ஒட்டுமொத்தமாக 50 விழுக்காடு இடங்களை அதிகரிக்கும் பிரிவை சேர்த்து திருத்தங்களை செய்து புதிய மசோதாவை தாக்கல் செய்ய தயார் என்று சொல்லக்கூடிய நிலை உருவானது. 50 விழுக்காடு இடங்களை ஒட்டுமொத்தமாக அதிகரித்தாலும் தென்னகம் பாதிக்கப்படும் என்ற விழிப்புணர்வை தமிழ்நாடு உருவாக்கி இருந்ததால் இந்த பம்மாத்துக்கு எதிர்க்கட்சிகள் ஒப்புக்கொள்ளவில்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் வாக்காளர்கள் பாஜகவுக்கு பூஜ்யம் மதிப்பெண் கொடுத்ததற்கு கிடைத்த வெற்றி இது.பாஜகவுக்கு மெஜாரிட்டி பலத்தை இழக்க வைத்தது தமிழ்நாடு. அதே பூஜ்ஜிய மதிப்பெண்ணை இந்த தேர்தலிலும் பாஜகவுக்கு தந்து தமிழ்நாட்டின் உரிமையை வாக்காளர்கள் நிச்சயமாக நிலை நிறுத்துவார்கள்.

தமிழ்நாட்டில் மசோதா எரிந்தது. நாடாளுமன்றத்தில் மசோதா வீழ்ந்தது! டெல்லிக்கு எதிரான போராட்டத்தின் முதல் வெற்றி!"

# உலகிலேயே குடும்பத் தலைவிகளின் உழைப்புக்கு ஊதியம் வழங்கிய ஒரே ஆட்சி தமிழ்நாடு

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது பரப்புரையில் மக்களின் இதயங்களோடு உரையாடுகிறார். குறிப்பாக ஒன்றை சுட்டிக்காட்ட வேண்டும். பெண்களுக்கான தமிழ்நாடு அரசின் உரிமைத் தொகை திட்டம் அவர்களின் குடும்ப உழைப்புக்கு வழங்கப்படும் ஊதியம் என்பதை உள்ளத்தில் பதிய வைக்கிறார். குடும்பத் தலைவி என்ற பெயரில் அவர்கள் உழைக்கிறார்கள்; அதற்கு ஊதியம் இல்லை; வேலைக்குச் செல்லும் ஆண்கள் தான் ஊதியம் பெறுகிறார்கள் என்று சமூகம் கூறுகிறது. குடும்பத் தலைவிகள் காலையில் தொடங்கி குடும்பத்திற்கு வழங்கும் வேலைகளை முதல்வர் பட்டியலிட்டுக் காட்டும்போது பெண்கள் அந்த எதார்த்தத்தை உணர்ந்து முதல்வரின் உரையோடு ஒன்றிப் போகிறார்கள். குடும்பத் தலைவிகளின் ஊதியமற்ற உழைப்புக்கு ஊதியம் வழங்க வேண்டும்; உரிய அங்கீகாரம் வேண்டும் என்ற இயக்கம் உலகம் முழுதும் நடந்து வருகிறது.

★ பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஜெர்மனி போன்ற நாடுகளில் குடும்பத் தலைவிகளின் ஊதியமற்ற உழைப்புக்கு சட்ட அங்கீகாரம் மட்டுமே கிடைத்திருக்கிறது.

★ குழந்தை வளர்ப்பு, சொத்துரிமை, ஓய்வூதியம் போன்றவற்றில் பெண்களின் குடும்ப உழைப்பு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்து இருக்கின்றன.

★ இத்தாலி, அயர்லாந்து, போலந்து, போன்ற நாடுகளில் சட்ட அங்கீகாரம் மட்டும் போதாது; நேரடி ஊதியம் வேண்டும் என்ற போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

★ சோசலிச கியூபாவில் குடும்பத்தில் பெண்ணுக்கும் ஆணுக்கும் சமமான பொறுப்பு இருக்கிறது என்று சட்டம் இருக்கிறது; இலவச கல்வியும் மருத்துவமும் சேவையாக வழங்கப்படுகிறது. ஆனால் வீடுகளில் ஊதியம் ஏதுமின்றி உழைக்கும் குடும்பத் தலைவிகளுக்கு ஊதியம் என்று உலகில் இதுவரை எந்த ஒரு நாட்டிலும் வழங்கப்படவில்லை.

திராவிட மாடல் ஆட்சி நடத்தும் தமிழ்நாடு தான் மகளிர் உரிமைத் தொகை வழியாக இதற்கு முன் உதாரணமாக உலகத்துக்கே வழிகாட்டி தலை நிமிர்ந்து நிற்கிறது. தமிழ்நாட்டைத் தொடர்ந்து தெலுங்கானா கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்கள் இத்திட்டத்தை பின்பற்றி வருகின்றன. இந்த கோரிக்கைக்காக போராடும் சர்வதேச பெண்கள் இயக்கங்கள் தமிழ்நாடு முன்னுதாரணத்தை சுட்டிக்காட்டி விவாதிக்கின்றன. இந்த சாதனையைத் தான் தமிழ்நாடு முதல்வர் மக்கள் இதயங்களில் பதிய வைத்து வருகிறார்.

**– விடுதலை இராசேந்திரன்.**

# 1973–ல் தஞ்சையில் பெரியாருக்கு கார் வழங்கும் விழாவில் நடந்தது என்ன?

*1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19ஆம் தேதி தஞ்சையில் பெரியாருக்கு புதிய கார் பரிசாக வழங்கப்பட்டது. மேடையில் ஏறுவதற்கு பெரியாருக்கு ஏற்பட்ட இடையூறுகளை தவிர்த்து பிரச்சாரத்திற்கான மேடையை காரின் ஒரு பகுதியாக இணைத்து இந்தக் கார் தயாரிக்கப்பட்டது. இந்தக் காரை 5 மாதங்கள் மட்டுமே பெரியார் பயன்படுத்தினார். தியாகராய நகரில் பெரியாரின் இறுதி உரையை இந்தக் காரில் இணைக்கப்பட்ட மேடையில் தான் ஆற்றினார்.*




*பெரியாரின் அந்தக் கார் திருச்சி உறையூரில் உள்ள பெரியார் மாளிகையில் நிறுத்தப்பட்டு இருந்தது. இது குறித்து 'இந்து' ஆங்கில நாளேடு (ஏப்ரல்-19) படத்துடன் ஒரு செய்திக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. திராவிடர் கழகம் திட்டமிட்டு வரும் 'பெரியார் உலகத்தில்' இந்த வேன் காட்சிப் பொருளாக இடம்பெறப்போவதாக செய்தி கூறுகிறது.*

*இந்தக் கார் வழங்கும் விழா, 1973 ஆக-19-ல் தஞ்சையில் எழுச்சியுடன் மாநாடு போல் நடந்தது. அந்த நிகழ்வுகள் குறித்து சில செய்திகளை இளையதலைமுறையின் கவனத்துக் கொண்டு வருகிறோம்.*

★ தஞ்சை மாவட்டத் திராவிடர் கழகம் ஏற்பாடு செய்த விழாவில் தமிழ்நாடு முழுவதும் இருந்து பல்லாயிரக்கணக்கில் தோழர்கள் திரண்டனர்.

★ தமிழ்நாடு முதல்வர் கலைஞர் பெரியாருக்கு கார் வழங்கினார். போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த பண்ருட்டி ராமச்சந்திரன் விழாவிற்கு தலைமை தாங்கினார். அமைச்சர்கள் ப.உ. சண்முகம், அன்பில் தர்மலிங்கம், மன்னை நாராயணசாமி (சென்னை பகுத்தறிவாளர் கழக தலைவர்), ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி சி.டி நடராசன், விடுதலை ஆசிரியர் கீ.வீரமணி ஆகியோர் விழாவில் பங்கேற்றனர். தஞ்சை கருஞ்சட்டைக் கடலாக காட்சியளித்தது. குடும்பம் குடும்பமாக பல்லாயிரக்கணக்கான தோழர்கள் திரண்டனர்.

★ பெரியாரின் உடல் நலனைக் காத்த பெரியாரின் நம்பிக்கைக்குரிய மருத்துவர்கள் விழாவில் பங்கேற்றனர். வேலூர் சி.எம்.சி மருத்துவமனை டாக்டர் பட், சென்னை பொது மருத்துவமனை தலைமை அதிகாரி டாக்டர் ராமச்சந்திரா, வேலூர் டாக்டர் ஜான்சன் ஆகியோர் விழாவிற்கு வந்திருந்தனர். கலைஞர் மருத்துவர்களுக்கு ஆடை போற்றி கவுரவித்தார்.

★ மாலை 6 மணி அளவில் மோரீஸ் கார்னர் பகுதியிலிருந்து கருஞ்சட்டை படை ஊர்வலம் புறப்பட்டது. கழகத் தோழர் சாமிநாதன் யானையின் மீது கம்பீரமாக கழகக்கொடியுடன் அமர்ந்து சென்றார்.

★ பாண்டு வாத்தியத்துடன் தாரை தப்பட்டை மேள தாளங்களோடு மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சிகள், வீர விளையாட்டுகளுடன் ஊர்வலம் நிகழ்ந்தது. பல்லக்கு போல் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் பெரியார் அமர்ந்து வந்தார்.

★ ஊர்வலம் மாநாட்டு மேடையை வந்தடைந்த நேரம் இரவு 9 மணி, வழிநெடுக மக்கள் வெள்ளம், கருஞ்சட்டை படை ஆர்பபரித்து அணிவகுத்தது. தமிழக முதல்வர் கலைஞர் பேசுவதற்கு முன்பு தஞ்சை பகுத்தறிவாளர் கழகத் தலைவர் டாக்டர் சின்னதுரை வழங்கிய காருக்கான தங்கச் சாவியை கலைஞர் பெரியாரிடம் பலத்த கரவொலிகளுக்கிடையே வழங்கினார்.

★கலைஞர் பேச எழுந்தபோது "தமிழ்நாடு தமிழருக்கே!" என்ற முழக்கம் விண்ணைப் பிளந்தது. மாநாட்டு மேடைக்கு முன்பு லட்சத்துக்கும் அதிகமான கருஞ்சட்டை தோழர்கள் திரண்டிருந்தனர்.

★ விழாவில் உரையாற்றிய அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் பெரியாருக்கு விழாக் குழு சார்பில் ஒரு கடிகாரத்தையும், அமைச்சர் மன்னை நாராயணசாமி ஒரு "டேப் ரெக்கார்டரை"யும் பரிசாக வழங்கினர். விழாக் குழு சார்பில் ரூ.50,000 பணத்தை கலைஞர் பெரியாரிடம் பலத்த கரவொலிக்கிடையே வழங்கினார்.

★ வேன் வழங்கும் திட்டத்தை முன்னின்று செயல்படுத்திய திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கீ.வீரமணி அவர்களுக்கு கலைஞர் மோதிரம் அணிவித்து பாராட்டினார்.

★ கலைஞர் உரை உருக்கமாகவும் உணர்வுபூர்வமாகவும் இருந்தது. "புத்தரால் சாதிக்க முடியாததை தந்தை பெரியார்தான் சாதித்துக் காட்டியுள்ளார். இந்த மண்ணில் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக போராடும் ஒரே ஜீவன் பெரியார் மட்டுமே. அவருக்கு இங்கே பரிசுகளை வழங்கினார்கள். நாம் அவருக்கு தர வேண்டிய உண்மையான பரிசு மாநிலங்களின் உண்மையான சுயாட்சி தான். அந்த சுயாட்சியை பெரியாரிடம் பரிசாக வழங்குவோம். அந்த வெற்றிப் பரிசை ஈட்டும் வரை பெரியார் வாழ வேண்டும்" என்றார் கலைஞர்.

★ மேடையில் பெரியார் அமர்வதற்கு அமைக்கப்பட்டிருந்த வெள்ளி சிம்மாசனத்தில் பெரியார் அமர மறுத்து; கலைஞரை கைப்பிடித்து அதில் அமர வைத்தார். கூட்டம் பலத்த கரவொலியால் அதிர்ந்தது.

★ தஞ்சை மாவட்டக் கழக சார்பில் கலைஞருக்கு பெரியார் பட்டாடை போர்த்தி கவுரவித்தார். பெரியாருக்கு வழங்கப்பட்ட காருக்கு வாகன வரியிலிருந்து வரிவிலக்கு தந்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது. ஏற்கனவே காஞ்சி சீனியர் சங்கரச்சாரிகளுக்கு இதேபோல் விலக்கு அளிக்கப்பட்டதை முன் உதாரணமாகக் கொண்டு இந்த விலக்கு அளிக்கப்பட்டது. போக்குவரத்துத் துறை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் இதற்கான முயற்சிகளை எடுத்தார்.

★ வேன் வாங்குவதற்காக கழகத் தோழர்கள் மக்களிடம் இருந்து ஒரு லட்சம் ரூபாய்க்கும் அதிகமாக நிதி திரட்டினார்கள்.

★ ஊரில் உள்ள பிரபல பேருந்து தயாரிப்பு நிறுவனமான எல்ஜி பாலகிருஷ்ணன் அண்ட் பிரதர்ஸ்"நிறுவனம் மிகவும் கவலை எடுத்து வாகனத்தை தயாரித்தது.

★ தஞ்சை கழகத் தலைவர் க.மா.குப்புசாமி, செயலாளர் ராஜகோபால், சா.மி நாகராஜன், க.மா.கோவிந்தராஜன் உள்ளிட்ட தோழர்கள் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கீ.வீரமணி தலைமையில் அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி மற்றும் ஜாதி ஒழிப்பு போராளிகள் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்தினர்.

## எனக்குப் பிறகு எவன் கேட்பான்?

### வேன் வழங்கும் விழாவில் பெரியாரின் உணர்ச்சி உரை!

**வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள் உரைகளுக்குப் பின்னர் இறுதியில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரை:**

இந்தப் பொருள்களை எல்லாம் நான் என்ன செய்யப் போகிறேன் என்று எனக்கே தெரியவில்லை. கார் ஒன்றுதான் எனக்கு அதிகம் பயன்படும். இந்த புதிய வேனில் சவாரி செய்வதால் ஒன்றும் நான் அதிகம் வாழப் போவதில்லை. ஆனால் இதைப் போன்று விழாக்களை காணும் போது தான் எனக்கு உற்சாகம் ஏற்படுகிறது. இந்த கார் வாங்குவதற்கு தமிழ்நாட்டு மக்கள் ஏராளமாக கேட்டதற்கு மேல் அதிகமாக கொடுத்துள்ளார்கள். அதில் குறிப்பாக தஞ்சை மாவட்டம் 40,000 ரூபாய் அளித்திருக்கிறது. அந்த அளவுக்கு நமது கொள்கைக்கு நாட்டில் வெற்றி கிட்டி இருக்கிறது; செல்வாக்கு பெருகிவிட்டது.

எனக்கு இன்றைக்கு வயது 94 அடுத்த மாதம் பிறந்தால் 95 வயது. 60 வருடங்களுக்கு முன்பு எமது மக்களின் யோக்கியதை என்ன அதாவது நாம் முயற்சி எடுப்பதற்கு முன்பு இந்த நாட்டு மக்களின் யோக்கிதை என்ன?

1925-வாக்கிலே நாம் நூற்றுக்கு 5 பேர் தான் படித்திருந்தோம். ஏன் அந்த நிலைமை? பள்ளிக்கூடங்களே இல்லாது போயிற்றே? அந்த நேரத்தில் கூட பார்ப்பான் நூற்றுக்கு நூறு படித்து இருந்தானே! அது மட்டும் எப்படி முடிந்தது? இந்த நாட்டை சேரன் ஆண்டான்; சோழன் ஆண்டான்; என்கிறார்களே ஏன் நாம் மட்டும் படிக்க முடியவில்லை? காரணம் அவர்களெல்லாம் இந்து மதத்தின்படி ஆண்டார்கள் அந்த மதத்திலேயே சூத்திரன் படிக்கக் கூடாது என்று கூறுகிறது.

### குளித்த குதிரையும் படித்த சூத்திரனும்!

குளித்த குதிரையும் படித்த சூத்திரனும் ஒன்று என்று மனுதர்மத்தில் இருக்கிறது. அதன்படி அவர்கள் ஆண்டதினாலே நாமெல்லாம் படிக்க வாய்ப்பு இல்லாது போயிற்று. நாம் தலையெடுத்து முயற்சி செய்தோம்; நமக்கு கல்வி கிடையாது என்று கூறும் மதத்தை ஒழிப்பது; கடவுளை தீர்த்துக் கட்டுவது? அவற்றிற்கு ஆதரவளிக்கும் காந்தியை ஒழிப்பது; அவற்றையெல்லாம் காப்பாற்றும் பார்ப்பானை தரைமட்டமாக்குவது என்று முயற்சி செய்து பாடுபட்டோம்; அதனால் மாற்றம் பெற்றோம். சும்மா என்னை பாராட்டுகிறார்கள்; உண்மை என்னவென்றால் கடவுளை செருப்பால் அடித்ததனால் முன்னேறினோம்; மதத்தை மீறியதால் தான் பிழைத்தோம்.

நான் என்ன அதிசயம் செய்து விட்டேன்! மலையை புரட்டிப் போட்டேனா? வில்லை வளைத்தேனா? ஆகாயக் கப்பலை கண்டுபிடித்தேனா? இல்லையே! நான் ஏதாவது செய்தேன் என்றால் சாமியை செருப்பால் அடித்தது தான்; சாக்கடையில் போடச் செய்ததுதான்.

**நான் என்ன அதிசயம் செய்து விட்டேன்! மலையை புரட்டிப் போட்டேனா? வில்லை வளைத்தேனா? ஆகாய கப்பலை கண்டுபிடித்தேனா? இல்லையே! நான் ஏதாவது செய்தேன் என்றால் சாமியை செருப்பால் அடித்தது தான்; சாக்கடையில் போடச் செய்ததுதான்.**

தோழர்களே! இந்தியாவில் இந்த காரியத்தை நாம் செய்யவில்லை என்றால் நாம் 'சூத்திரன்' தானே மறுக்க முடியுமா? இந்தியாவிலேயே இரண்டு பிரிவு தான் இருக்கிறது. "பிராமணன், சூத்திரன்" என்ற இரண்டு பிரிவு தானே இந்து மதம்; இந்து என்று ஒப்புக் கொண்டால் அது பண்டார சன்னதியாக இருந்தாலும் 'சூத்திரன்' தானே. ஒவ்வொரு பயலும் நெற்றியிலே சாம்பலை பூசிக் கொள்கிறானே! சிவ!, சிவா என்கிறானே! அவன் யோக்கியதை என்ன? கோயிலுக்குள் எந்த இடம் வரை உள்ளே போகிறான்? கர்ப்பக்கிரகத்துக்குள் போக உனக்கு யோக்கியதை உண்டா? ஏன் உனக்கு அந்த யோக்கியதை இல்லை? இதைப் பற்றி நீ வெட்கப்படுகிறாயா? இந்த இழிவு எப்போது நீங்குவது?

### வெட்கப்படுங்கள்

பின்தங்கிய சமுதாயத்தில் பிறந்த கலைஞர் இந்த நாட்டின் முதல்வராக முடிகிறது. இந்த சமூகத்திலிருந்து ஒவ்வொருவராக வர முடிகிறது என்றால்; அது என் கொள்கைக்கு கிடைத்த வெற்றி. ஆனால் இந்த கோயில் கர்ப்பக் கிரகத்தில் செல்ல முடியவில்லை? நாம் வெட்கப்பட வேண்டாமா?

தோழர்களே! உங்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன். நான் செத்துப் போனாலும் நீங்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். என்றைக்கு இந்த கோயிலுக்கும் கடவுளுக்கும் மதத்திற்கும் முழுக்குப் போடுகிறார்களோ; என்றைக்கு அவற்றையெல்லாம் குப்பைத் தொட்டியில் வீசுகிறார்களோ, அன்றைக்குத்தான் நீங்கள் மனிதர் என்று அர்த்தம்! அதுவரை உங்களுக்கு முன்னேற்றம் ஏது?

**இன்னும் எத்தனை நாளைக்கு சொல்லிக் கொண்டே இருக்க முடியும்! எனக்குப் பின்னால் எவன் வந்து இவற்றையெல்லாம் செய்யப் போகிறான்? அப்படி எவனாவது சொன்னால் விட்டு வைப்பார்களா என்பதே சந்தேகம்.**

நான் உலகைச் சுற்றியவன். அந்த அனுபவத்தை எல்லாம் வைத்துத்தான் கூறுகிறேன். எவனொருவன் நெற்றியில் சாம்பல் பூசி இருந்தாலும் நாமம் போட்டு இருந்தாலும் காரி துப்புங்கள்! அவன் மீது துப்ப வேண்டாம்; வீதியிலே துப்புங்கள். ச்சீ.. நீ ஒரு மனிதனா? இன்னும் பாப்பானின் வைப்பாட்டி மகனாக வாழ ஆசைப்படுகிறாயா? என்று காரித் துப்ப வேண்டும் என்று பெரியார் முழங்கினார். பெரியார் உரையை இறுதிவரை கலைஞர் மேடையிலிருந்து கேட்டார்.

**தொகுப்பு: இரா.**

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# கழகத் தலைவர் பங்கேற்ற நிகழ்ச்சிகள்

## திருப்பரங்குன்றம் வரலாற்று ஆய்வு நூல் அறிமுக விழா!

சேலம்: தமுஎகச சார்பில் எழுத்தாளர் சூர்யா சேவியர் எழுதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்ட ‘திருப்பரங்குன்றம் முழு வரலாறு’ ஆய்வு நூல் அறிமுக விழா 14.03.2026 சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் சேலம் கோட்டை மைதானத்தில் உள்ள மாநகராட்சி சமுதாயக் கூடம் கலைஞர் கருணாநிதி திருமண மண்டபத்தில், த.மு.எ.க.ச சேலம் மாவட்ட உதவித் தலைவர் மேவை.சண்முகராஜா தலைமையில் நடைபெற்றது.



முன்னாள் முத்தவல்லி ஜாமியா மஸ்ஜித் நாசர்,சையத் மூஸா (இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்டத் தலைவர்), காஜாமொய்தீன் (வி.சி.க இஸ்லாமிய ஜனநாயக பேரவை மாநிலச் செயலாளர்), ஷேக்முகம்மது (மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட தலைவர்), சதாம் உசேன் (மனிதநேய மக்கள் கட்சியின் மத்திய மாவட்டச் செயலாளர்), ஷரிப் பாஷா (எஸ்.டி.பி.அய் சேலம் மேற்கு மாவட்டத் தலைவர்), சோபனா (த.மு.எ.க.ச மாவட்டச் செயலாளர்), பிரவீன்குமார் (மக்கள் ஒற்றுமை மேடை ) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திமுக சேலம் மாநகரச் செயலாளர் ரகுபதி வரவேற்புரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி கருத்துரையாற்றினார். சிறப்பு விருந்தினர்களாக சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, த.மு.மு.க பொதுச்செயலாளர் பேராசிரியர் முனைவர் ஜெ.ஹாஜாகனி, த.மு.எ.க.ச மாநில பொதுச்செயலாளர் தோழர் களப்பிரன் , நூல் ஆசிரியர் எழுத்தாளர் சூர்யா சேவியர் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

பாரதி புத்தகாலயம் கலியபெருமாள் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது. நிகழ்வில் கழகத் தோழர்கள் டேவிட், கிருஷ்ணன், தங்கதுரை, ஆனந்தி, பிரபாகரன், நாகராஜ், அருள்பாண்டியன், தேவராஜ், சுதர்சன், கவியரசு, கோகுல், பிரேமா, கொங்கனாபுரம் கோகுல், தனசேகர், ஆனந்த், அம்ஜித் கான், நவராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்ஈழம் – தினேஷ் குமார் இணையேற்பு விழா!

தோழர் அறக்கட்டளை நிறுவனர் சாந்தகுமார் - லதா ஆகியோரின் மகள் தமிழ்ஈழம் அவர்களுக்கும் மதுரையைச் சேர்ந்த தினேஷ்குமார் அவர்களுக்கும் வாழ்க்கை துணைநல ஒப்பந்த விழா 22.02.2025 ஞாயிறு அன்று மாலை 6 மணி அளவில் கோவை நல்லாம்பாளையம் பொன்மணி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. புதிய குரல் நிறுவனர் ஓவியா தலைமை வகித்து வாழ்த்துரையாற்றினார்.

பொள்ளாச்சி உமாபதி (மாநிலச் செயலாளர், தி.மு.க கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை), ஆறுச்சாமி (த.பெ.தி.க தலைமை நிலையச் செயலாளர்), மயூரா தாமோதரசாமி (கல்வியாளர்), முனைவர் தமிழரசி, முகம்மது ஜியாவுதின் (நீதிபதி, மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம் தமிழ்நாடு அரசு), மோகனசுந்தரம் (ஸ்ரீராகவேந்திரா சேவா டிரஸ்ட்), திருப்பூர் தமிழ்ச்செல்வி (கருணா மனோகரன் அறக்கட்டளை), அசோக்குமார் (அறிவுச்சோலை அறக்கட்டளை) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



த.பெ.தி.க பொதுச்செயலாளர் கு.இராமகிருஷ்ணன் மணமக்களுக்கு வாழ்க்கை துணைநல ஒப்பந்தம் செய்து வைத்து வாழ்த்துரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, த. பெ. தி. க தலைமை நிலைய செயலாளர் ஆறுச்சாமி, புலவர் செந்தலை ந. கௌதமன் (சூலூர் பாவேந்தர் பேரவை நிறுவனர், தமிழ் இணையக் கல்விக்கழக நெறியாளர்), பேரறிவாளன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர்.

நிகழ்ச்சியில் புலவர் செந்தலை ந. கௌதமன் "இந்தியாவில் வடக்கின் அதிகாரம்" என்ற நூலை வெளியிட்டார். நூலை மணமக்கள், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, த.பெ.தி.க பொதுச்செயலாளர் கு. இராமகிருஷ்ணன், த.பெ.தி.க தலைமை நிலையச் செயலாளர் ஆறுச்சாமி ஆகியோர் பெற்றுக்கொண்டனர். நிறைவாக தோழர் அறக்கட்டளை நிறுவனர் சாந்தகுமார் நன்றியுரையாற்றினார். கழகப் பொருளாளர் துரைசாமி, தலைமைக்குழு உறுப்பினர் ரத்தினசாமி, திருப்பூர், கோவை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள், த.பெ.தி.க, தி.மு.க, மற்றும் இடதுசாரி அமைப்புத் தோழர்கள் பலர் கலந்துக்கொண்டனர்.

## இலக்கியா – விஷ்ணுராம் ஆகியோரின் திருமண வரவேற்பு விழா!

கோவை மாவட்டம், சீரபாளையம் பகுதியைச் சார்ந்த (விடியல் பதிப்பகம்) விசயக்குமார் - கற்பகவள்ளி இணையரின் மகள் இலக்கியா அவர்களுக்கும் கோவை மாவட்டம், கிணத்துக்கடவு அரசம்பாளையம் பகுதியைச் சார்ந்த பழனிசாமி - பாக்கியலட்சுமி இணையரின் மகன் விஷ்ணுராம் அவர்களுக்கும் திருமண வரவேற்பு விழா 23.02.2026 திங்கள் அன்று மாலை 6 மணி அளவில் பொள்ளாச்சி, ஊஞ்சவேலாம்பட்டியில் உள்ள வேல் மஹாலில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி வாழ்த்துரை வழங்கினார். பொள்ளாச்சி வெள்ளிங்கிரி, கோவை மாவட்டச் செயலாளர் பன்னீர்செல்வம், கோவை மாவட்ட அமைப்பாளர் தமிழ்ச்செல்வி, காவை.அவினாசி ஆகியோர் கலந்து கொண்டனர்.



## உலக மகளிர் தினத்தையொட்டி 9 நூல்கள் வெளியிடு

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு "மறுக்கப்படும் உரிமைகள், மறைக்கப்பட்ட வரலாறுகளைப் பேசும் .வானதியின் கவிதைகள், வழி, தியாகச்சுடர் அன்னை பூபதி, கஸ்தூரியின் ஆக்கங்கள், மார்ச்-8, அனைத்து உலக பெண்கள் நாள், கனவுக்கு வெளியேயான உலகு, பெண் விடுதலையும் விடுதலைப்புலிகளும், பெண்களும் புரட்சியும், வேர்கள் துளிர்க்கும், காதோடு சொல்லி எழு ஆகிய 9 நூல்கள் வெளியிடப்பட்டன. வெளியீட்டு விழா 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 5 மணியளவில் சென்னை, வடபழனி திரைப்பட இசைக் கலைஞர்கள் சங்கத்தில் ம. டேவிட் பெரியார் தலைமையில் நடைபெற்றது. சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பௌமிகா வரவேற்புரையாற்றினார். இனியாழ், ஆண்டனி ராஜ் (அ. தி. மு. க), அன்பு தனசேகர் (தலைமைக்குழு உறுப்பினர் திவிக), லாரன்ஸ் பிரபாகரன் (தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்), வள்ளலார் நகர் தினகரன், அ. சி. சின்னப்பத்தமிழர் (தமிழ் வழிக்கல்வி இயக்கம்), M. K பிரபாகரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.




ஸ்ரீதேவி இயக்கத்தில் "எங்களின் குரல்" நாடகம் அரங்கேற்றப்பட்டது. புதுச்சேரி மாநில திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் பதிப்புரையாற்றினார். சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் இறை. அங்கயற்கண்ணி, துளசிமணி சக்திவேல் (ம. தி. மு. க அரச்சலூர் பேரூராட்சி துணைத் தலைவர்), எழுத்தாளர் அர்ஷா, வழக்குரைஞர் தமயந்தி, பெரியார் சாக்ரடீஸ் (பெரியாரியச் செயல்பாட்டாளர்), எழுத்தாளர் தங்கலட்சுமி சுப்பிரமணியன், மகாலட்சுமி (வழக்குரைஞர் பெண்கள் எழுச்சி இயக்கம்), செந்தில் (த. தே. ம. மு ஒருங்கிணைப்பாளர்) ஆகியோர் நூல்கள் பற்றி கருத்துரையாற்றினர். செல்வி (மனிதி ஒருங்கிணைப்பாளர்) நோக்கவுரையாற்றினார். திரைப்பட இயக்குனர் சங்ககிரி ராஜ்குமார் மதிப்புரையாற்றினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி நூல்களை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். பேராசிரியர் சரஸ்வதி, தியாகு (த. தே. வி. இ.பொதுச்செயலாளர்), மல்லை சத்யா (தி. வெ. க தலைமை ஒருங்கிணைப்பாளர்), வ.ரமணி (மாநிலச் செயலாளர் சாதி ஒழிப்பு முண்ணனி), அஜிதா (வழக்குரைஞர் சென்னை உயர்நீதி மன்றம்) ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். வழக்கறிஞர் சாரநாத் (ம.இ.எ.ப.விசிக), கார்த்தி, செ. கரிகால்வளவன், தபசி குமரன் ( தலைமை நிலையச் செயலாளர்), இரா. உமாபதி (மாவட்டச் செயலாளர்), திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் வ.கருப்பண் (Skyaura Studios), U2Brutus மைனர், இராவணன் (மா.துணை செயலாளர்), மஞ்சு ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டனர். சுதா காந்தி, ரமணி, செல்வி, ஆகியோர் நிழ்ச்சியை ஒருங்கிணைத்தார்கள்.

பிரகாஷ் (மாஸ்டர்), மோகன், பரதன், ஜேம்ஸ், காஞ்சிபுரம் ரவி பாரதி, லட்சுமணன், ஊடகவியலாளர்கள் தினேஷ், லீலாவதி மற்றும் எழுத்தாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். தோழர் அருண் தேநீர் மற்றும் சிறுதானிய உணவுகளை வழங்கினார். தோழர் ரியாஸ்கான் படங்கள் மற்றும் காணொளி பணிகளை செய்து கொடுத்தார்.

## கழகத் தோழர் பிரவீன் ~ சமீம் மோனிஷா மதமறுப்பு திருமணம்!

கழகத் தோழர் சீ. பிரவீன்குமார் - ஜா. சமீம் மோனிஷா ஆகியோரின் சுயமரியாதை திருமணம், மார்ச்-23, காலை 11 மணிக்கு, தேனாம்பேட்டை சமூகநலக் கூடத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் முன்னிலையில் நடைபெற்றது.

மயிலை சுகுமாரின் ஒருங்கிணைப்பில், விசிக துணைப் பொதுச்செயலாளர் வன்னி அரசு, தலைமைக் குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, விசிக சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் சாரநாத் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சென்னை மாவட்டத் தலைவர்கள் வேழவேந்தன், சேத்துபட்டு இராசேந்திரன், துணை செயலாளர் இராவணன், மாவட்ட அமைபாளர்கள் தட்சணாமூர்த்தி, ம.கி எட்வின் பிரபாகரன், இளைஞரணி அமைப்பாளர் ப.அருண், திருவல்லிக்கேணி பொறுப்பாளர்கள் கோபிநாத், சூர்யா மற்றும் கழகத் தோழர்கள் பலர் பங்கேற்றனர். கழக ஏட்டுக்கு மணமக்கள் ரூ. 2,000 நன்கொடையாக வழங்கினர்.



Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : April 24, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran